<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்</u>

**<u>அசல் வழக்கு எண்.732/2023</u>**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய 1–வது நபரின் வாக்குமூலம் 1896–ஆம் ஆண்டு 44வது விதியின் ஏற்பாட்டின் திரு.சி.ப.முல்லைவாணன்,பி.ஏ.,பி.எல்., (Hons) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை_நீதிபதி, பல்லாவரம் ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாண்டியன் |
| த/பெ | : | ராமசந்திரன் |
| வயது | : | 59 |
| தொழில் | : | கூலி |
| கிராமம் | : | குரோம்பேட்டை |
| வட்டம் | : | பல்லாவரம் |

முதல் விசாரணை வா.சா. 1

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இத்துடன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டதுதான்.

| | |
|---|---|
| வா சா ஆ 1 | 16.11.2006 தேதியிட்ட பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண் 1794/2018 சான்றிட்ட நகல் |
| வா சா ஆ 2 | 02.03.2012 தேதியிட்ட பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரைய பத்திரம் ஆவண எண் 1795/2018 சான்றிட்ட நகல் |
| வா சா ஆ 3 | 16.03.2011 தேதியிட்ட நத்தம் நிலவரி தோராய பட்டா எண் 921 சான்றிட்ட நகல் |
| வா சா ஆ 4 | 02.06.2014 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் அசல் |
| வா சா ஆ 5 | சொத்து வரி ரசீதுகள் மற்றும் குடிநீர் வரி ரசீது 2 எண்ணிக்கை அசல். |
| வா சா ஆ 6 | மாண்பமை ஆலந்தூர் சார்பு நீதிமன்ற மே.வ.எண் 92/2021 தீர்ப்புரை இணையவழி தரவிரக்கம் |

| | |
|---|---|
| வா சா ஆ 7 | 24.06.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அசல் |
| வா சா ஆ 8 | 28.06.2019 தேதியிட்ட அஞ்சலக ரசீதுடன் கூடிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா சா ஆ 9 | 02.07.2019 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் |

தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram